Tsi11T

தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்
முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2023

23-01-2023

வகுப்பு 11
பொதுத்தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 14×1=14

1) ஏடு, சுவடி, பொத்தகம், பணுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ---- என்பதாகும்
அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

2) காவடிச்சிந்துக்குத் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

3) சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க
அ) வரை-மலை ஆ) வதுவை-திருமணம் இ) வாரணம்-யானை ஈ) புடவி-கடல்
i) அ, ஆ, இ-சரி, ஈ-தவறு ii) ஆ, இ, ஈ-சரி, அ-தவறு
iii) அ, இ, ஈ-சரி, ஆ-தவறு iv) அ, ஆ, ஈ-சரி, இ-தவறு

4) பாயிரம் இல்லது - அன்றே
அ) காவியம் ஆ) பணுவல் இ) பாடல் ஈ) கவிதை

5) 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?
அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

6) 'வட்ட கரியவிழிகண்ணம்மா''
வானக் கருமை கொல்லோ? இவ்வடிகளில் அமைந்துள்ளது ----
அ) உவமை ஆ) உள்ளுறை இ) உருவகம் ஈ) இறைச்சி

7) காவியத்திற்கான பொதுவான பாடுபொருள் -----
அ) இயற்கை ஆ) காதல் இ) வாழ்வு ஈ) மரணம்

8) வட ஆரிநாடு என்பது ----
அ) திருமலை ஆ) திருக்கழுக்குன்றம் இ) திருக்குற்றாலம் ஈ) திருநெல்வேலி

9) 'காயாகொன்றை' எனும் ஐங்குறுநூற்றுப் பாடலின் திணை ----
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

10) 'சீறத்' என்ற அரபுச் சொல்லின் திரிபு -----
அ) சீறத் ஆ) சீறப் இ) சீற ஈ) சீறா

11) திணைப்புனம் காப்பவள் ----- அ) செவிலி ஆ) நற்றாய் இ) குறமகள் ஈ) தோழி

12) பிரபஞ்சனின் இயற் பெயர் ----
அ) அகத்தியலிங்கம் ஆ) வைத்தியலிங்கம் இ) நாகலிங்கம் ஈ) லிங்குராஜ்

13) ஆசிரியப்பாவின் ஓசை ----- அ) செம்மல் ஆ) தூங்கல் இ) அகவல் ஈ) துள்ளல்

14) பெண்கள் விளையாடும் விளையாட்டுக்களுள் ஒன்று
அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக: 3×2=6

15) மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?
16) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
17) காவடிச் சிந்து என்பது யாது?
18) காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை எழுதுக: 2×2=4

19) தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறு குறிப்பு வரைக.
20) ஆனந்தரங்கரின் வருணனைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
21) இந்திய கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக: 7×2=14

22) ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக: அ) முளைத்த ஆ) மலிந்த
23) ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக: அ) மனையென ஆ) இயைவதாயினும்
24) தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இணைச் சொற்றொடர்களாக்குக:
ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்
25) ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக் குறிப்புத் தருக: அ) ஐந்தும் ஆ) செங்கயல்
26) மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக: அ) நிறைகுடம் ஆ) பசுமரத்தாணி போல

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



27) மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக: பொரி, பொறி

28) சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க: அ) வைகை ஆ) பலகை

29) வல்லினமெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக:
குமரனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா?
என வீட்டிற்கு வருகைத்தாருங்கள்

30) ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை எழுதுக:** 2×4=8

31) "ஏவல்மறுக்கும் சிறுவிளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்குணர்ந் தனள்கென் -இடம்சுட்டி பொருள் விளக்கம் தருக.

32) உருவக அணியினை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

33) சிங்கி பெற்ற பரிசுகளாக குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

34) சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** 2×4=8

35) ஜீவாவின் பேச்சு நடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?

36) ஃப்ரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக கோயில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

37) ஆனந்தரங்கா ஒருவரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

38) சமணப்பள்ளிகளும், பெண்கல்வியும்- குறிப்பு வரைக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** 3×4=12

39) நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப்படும் - இக்குறட்பாவை அலகிடுக.

40) இலக்கிய நயம் பாராட்டுக:

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே/ ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே/
வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே மீண்டும்
வாடிவாடிப் போவேதேனோ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே / பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே -*கவிமணி*

சிவக்குமார் .மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப
வல்லம்-627809
தென்காசிமாவட்டம்

41) சொந்தமாகக் கவிதை புனைக (ஏதேனும் ஒன்று) அ) தென்றல் ஆ) வெண்ணிலா

42) பழமொழியை வாக்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:
அ) வாய்மையே வெல்லும் ஆ) தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும்

43) தமிழாக்கம் தருக:
1) You must be the change you wish to see in the world.
2) Nobody can hurt me without my Permission.
3) The weak can never forgive - Forgiveness is the attribute of the strong.
4) An eye for an eye only ends up making the whole world blind.

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடைதருக:** 3×6=18

44) அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப்பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க. **(அல்லது)**
ஆ) காவடிச்சிந்து ஒருவழிநடைப்பாடல் - இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.

45) அ) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை? **(அல்லது)**
ஆ) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்தைச் சிதறாது விளக்குக.

46) அ) வாடிவாசல் கதைவாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.
ஆ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவீர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** 6

47) அ) சிறகிலிருந்து........ எனத் தொடங்கும் பாடல்
ஆ) 'பெரிது' என முடியும் குறட்பா.

-------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com